நாள்.24.03.2026

**அசல் வழக்கு எண். 69/2017**
**பெயர்.மதியழகன்**

**த.பெ. முருகையன்**

**வா.சா.1– 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

உயிலில் சொத்து விவரம் போடவில்லை என்றால் ஆமாம். 4 அயிட்ட சொத்துகள் இல்லாமல் ராஜம்மாளுக்கு வேறு சில சொத்துகளும் உள்ளது என்றால் ஆமாம். மனைக்கட்டு வீடும் உள்ளது. அதை இந்த வழக்கில் சேர்க்காததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் காரணம் இல்லை. 4 அயிட்ட சொத்துகள் எனக்கு சொந்தமானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது எனக்கு எழுதிக்கொடுத்த உயில் உண்மையானது என்று உயிலில் அடிப்படையில் எனக்கு சொந்தமான சொத்துகள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் உயில் சம்பந்தமாகதான் கேட்டுள்ளேன்.உயில் எழுதி எனக்கு தெரிந்த காலத்திலிருந்து 3 வருடத்திற்குள் உயில் உண்மையானது என்று வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. அதனால் உயில் உண்மையானது என்று கேட்ட இந்த வழக்கு சட்டப்படி தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

ராஜம்மாள் வாரிசுகள் இல்லாமல் இறந்ததால் இரண்டாம்நிலை வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. ராஜம்மாள் கடைசி காலத்தில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் அவர் ரேகையை மோசடியாக உற்பத்தி செய்து உயில் ஆவணத்தை தயாரித்து இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.